**நியதிகளும் நிபந்தனைகளும் - Round-Up சேமிப்புக்கள்**

FriMi ஊடாக ஆரம்பிக்கப்படுகின்ற அனைத்து Round-Up சேமிப்புக் கணக்குகளையும் பின்வரும் நியதிகளும் நிபந்தனைகளும் நிர்வகிக்கும்.

**கீழே “ஏற்றுக்கொள்க” என்ற பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் வாடிக்கையாளர் பின்வருமாறு ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகின்றார்:**

இந்நியதிகளும் நிபந்தனைகளும் Round-Up சேமிப்பு உற்பத்தி தொடர்பிலான விபரங்களுடன் ஒன்றிணைந்து வாடிக்கையாளருக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இந்நியதிகளை மற்றும் நிபந்தனைகளை அத்துடன் அத்தகைய விபரங்களை வாடிக்கையாளர் வாசித்து புரிந்துகொண்டுள்ளார் என்றும் அவற்றின் மூலம் பிணிக்கப்படுவதற்கு இணங்கி சம்மதிக்கின்றார் என்றும்:

**கணக்கை ஆரம்பித்தல்**

1. Round-Up சேமிப்புக் கணக்கு, உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் உறுதிப்படுத்தல்களை நிறைவுசெய்வதை அனுசரித்து வங்கியினால் செயற்படுத்தப்பட்டுள்ள FriMi சேமிப்பு கணக்கொன்றை கொண்டுள்ள வாடிக்கையாளர் மூலம் ஆரம்பிக்கப்படலாம்.

2. FriMi செயலி மீது Round-Up சேமிப்பு தெரிவை வாடிக்கையாளர் இயலச்செய்கின்ற போது, வங்கிக்கு வாடிக்கையாளர் மூலம் வழங்கப்பட்டுள்ள மிகவும் அண்மைய உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் விபரங்களை பயன்படுத்தி வாடிக்கையாளரின் பெயரில் Round-Up சேமிப்புக் கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு வாடிக்கையாளர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

3. Round-Up சேமிப்பு கணக்கொன்றின் மீதான வரவுகளும் பற்றுகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்:-

- மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளுக்கு நிதியளிப்பதற்கான FriMi சேமிப்பு கணக்கிலிருந்து கொடுப்பனவு கொடுக்கல்வாங்கல் தொடர்பில் Round-Up சேமிப்பு கணக்கின் மாற்றல் அத்துடன்
- FriMi சேமிப்பு கணக்கொன்றிற்கான மாற்றல்

4. ஒவ்வொரு Round-Up சேமிப்புக் கணக்கும் FriMi யில் பேணப்படுகின்ற கணக்குகள் வகையினுக்குள் வகைப்படுத்தப்படுவதுடன் Round-Up சேமிப்புக் கணக்குகள் தொடர்பில் ஏற்புடையதாகவிருக்கும் வட்டி வீதமும் வரிகளும் FriMi செயலியில் வெளியிடப்படும்.

5. Round-Up சேமிப்புக் கணக்குகளுக்காக வாடிக்கையாளருக்கு இலத்திரனியல் கணக்கு கூற்றுகள் வழங்கப்படாது என்பதுடன் செயற்பாட்டிலுள்ள வங்கி கட்டணங்களுக்குட்பட்டு காகித அடிப்படையிலான கணக்கு கூற்றுகள் கோரிக்கையின் மீது மாத்திரம் வழங்கப்படும்.

6. வாடிக்கையாளர், FriMi செயலியூடாக Round-Up சேமிப்புக் கணக்குகளுக்கான கொடுக்கல்வாங்கல் விபரங்களைப் பார்வையிடலாம்.

7. ஒவ்வொரு Round-Up சேமிப்பு கணக்கிற்கும் கணக்கிலக்கம் ஒன்று வழங்கப்படும். வங்கியினுடனான அனைத்து தொடர்பாடல்களிலும் அது குறிப்பிடப்பட வேண்டும்.

**Round-Up சேமிப்புக் கணக்குத் தொழிற்பாடுகள்**

8. FriMi செயலியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வாடிக்கையாளர் Round-Up சேமிப்பு கணக்கை தெரிவுசெய்யும் விருப்பத்தெரிவை கொண்டிருப்பார்.

9. வாடிக்கையாளர் மூலம் Round-Up சேமிப்புக் கணக்கு இயலச்செய்யப்பட்டவுடன் FriMi சேமிப்பு கணக்கிலிருந்து Round-Up சேமிப்பு கணக்கிற்கு Round-Up தொகை தன்னியக்கமாக மாற்றலாகும் (ஆயின், FriMi சேமிப்பு கணக்கில் போதுமான நிதியங்கள் இருக்க வேண்டும்).

10. Round-Up சேமிப்புத் தெரிவானது FriMi சேமிப்பு கணக்கு வாயிலாக நடாத்தப்படுகின்ற கொடுப்பனவு கொடுக்கல் வாங்கல்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகவிருக்கும்.

11. கொடுப்பனவு கொடுக்கல்வாங்கல் நேரத்தில் Round-Up தொகையை மாற்றல்செய்வதற்கு FriMi சேமிப்பு கணக்கில் உள்ள மீதி போதமலிருப்பின், அக்கொடுப்பனவு கொடுக்கல்வாங்கல் தொடர்பில் Round-Up கணக்கு செயலுறுத்தப்படாதிருக்கும். மேலும், அதன்பின்னர், FriMi சேமிப்பு கணக்கில் போதிய நிதியங்கள் கிடைக்கப்பெற்றவுடன், Round-Up கணக்கு மீட்கப்படாது.

12. வாடிக்கையாளர் மூலம் தெரிவுசெய்யப்பட்ட Round-Up பெறுமதியை வாடிக்கையாளர் எந்நேரத்திலும் மாற்ற முடியும்.

13. வேண்டப்படுகின்ற போதும் வேண்டப்படுகின்றவாறும் Round-Up சேமிப்புத் தெரிவின் கீழ் Round-Up பெறுமதியை மாற்றுவதற்கு வங்கி உரிமையினை கொண்டுள்ளது.

14. கொடுப்பனவு கொடுக்கல் வாங்கலை திரும்பல் செய்வதற்கு வாடிக்கையாளர் விரும்புவாராயின், அக்கொடுப்பனவு கொடுக்கல் வாங்கலுக்கான Round-Up பெறுமதி திரும்பல் செய்யப்படாது.

**Round-Up சேமிப்புத் தெரிவை முடிவுறுத்தல்**

15. வாடிக்கையாளர், Round-Up சேமிப்புத் தெரிவை எந்நேரத்திலும் ''மூடலாம்''. அத்தகைய சந்தர்ப்பத்தில், Round-Up சேமிப்புக் கணக்கில் உள்ள அனைத்து நிதியங்களும், தன்னியக்கமாக வாடிக்கையாளரின் FriMi சேமிப்பு கணக்கிற்கு மாற்றல்செய்யப்படும்.

16. வாடிக்கையாளர், Round-Up சேமிப்புத் தெரிவை எந்நேரத்திலும் ''இடைநிறுத்தலாம்'' மற்றும் ''மீளத்தொடங்கலாம்''. அத்தகைய சந்தர்ப்பத்தில், Round-Up சேமிப்புக் கணக்கில் உள்ள நிதியங்கள் Round-Up சேமிப்புக் கணக்கிலேயே காணப்படும்.

17. Round-Up சேமிப்புக் கணக்கினை மூடிய பிறகு மூடப்பட்ட Round-Up சேமிப்புக் கணக்கில் எவையேனும் கொடுக்கல் வாங்கல்களை செயலாற்றுவதற்கு வாடிக்கையாளர் அனுமதிகப்படமாட்டார்.

18. வாடிக்கையாளருக்கு அறிவித்தலை வழங்கி Round-Up சேமிப்புக் கணக்கினை மூடுவதற்கும் அத்துடன் அத்தகைய மூடுதலின் பின் அதிலுள்ள பணத்தொகைகளை FriMi சேமிப்பு கணக்கிற்கு மாற்றல் செய்யபடுவதற்கும் வங்கி உரிமையினை கொண்டிருக்கும்.

**நானாவிதமானவை**

19. இதிற் குறிப்பிடப்பட்டவைக்கு முரணாக எதுஎவ்வாறிருப்பினும், வங்கியானது வங்கிக்கான வாடிக்கையாளரின் எவையேனும் பொறுப்புகளை வாடிக்கையாளரின் Round-Up சேமிப்புக் கணக்குடன் அறிவித்தலின்றி ஒன்றுசேர்த்து அத்தகைய பொறுப்புகள் உண்மையாயினும் சரி அல்லது எதிர்பாராதவையாயினும் சரி, முதன்மையானதும் சரி அல்லது பிணைய உறுதி உடையதாயினும் சரி அத்துடன் பலதாக அல்லது ஒருமித்ததாக இருப்பதாயினும் சரி ஏதேனும் வேறு கணக்கு மீது அல்லது வேறு ஏதேனும் விடயத்தில் வங்கிக்கு வாடிக்கையாளரிடமிருந்து கடனாகசெலுத்த வேண்டிய வேறு தொகைக்கு/ தொகைகளுக்கு எதிராக Round-Up சேமிப்புக்

கணக்கின் வரவிற்கான ஏதேனும் தொகையினை/நிலுவையினை எதிரீடுசெய்யலாம் அல்லது மாற்றல்செய்யலாம்.

20. வங்கி, எந்நேரத்திலும் இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் மாற்றுவதற்கு தானாக உரிமையினை கொண்டிருக்கும். அத்தகைய மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.

21. இந்நியதிகளும் நிபந்தகைளும் சட்டத்தினால் அத்தகைய திருத்தங்கள் அவசியப்படுத்துகின்ற விடத்து தன்னியக்கமாக மாறுபவையாக இருக்கும்.

22. இதில் வேறு வகையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டாலன்றி, இந்நியதிகளில் மற்றும் நிபந்தனைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பெரிய எழுத்துக்களினான சொற்பதங்கள் வாடிக்கையாளரினால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட FriMi நியதிகள் மற்றும் நிபந்தனைகள் (''பிரதான ஒப்பந்தம்'') கொண்டிருக்கும் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

23. இந்நியதிகளும் நிபந்தனைகளும் பிரதான ஒப்பந்தம் மற்றும் வங்கியின் பொதுவான வியாபாரதொழில் நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் எற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும் (இவற்றின் பிரதிகள் கோரிக்கையின் பேரில் கிடைக்கப்பெறுகின்றன). அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இதில் கூட்டிணைக்கப்பட்டிருந்தாலும் சரி கூட்டிணைக்கப்படவில்லையாயினும் சரி என்பதனை பொருட்படுத்தாது வாடிக்கையாளர் அனைத்து அத்தகைய நியதிகளாலும் நிபந்தனைகளாலும் பிணிக்கப்படுவார்.

**வரைவிலக்கணங்கள்**

**''வங்கி''** என்பது நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி (PQ 118) என்பது பொருளாகும்.

**"Round-Up தொகை**'' என்பது தெரிவுசெய்யப்பட்ட Round-Up பெறுமதியின் அடிப்படையில் கொடுப்பனவு கொடுக்கல் வாங்கல் தொடர்பில் FriMi சேமிப்பு கணக்கிலிருந்து பற்றுவைக்கப்படுகின்ற வாடிக்கையாளர்களை தொகை என்பது பொருளாகும்.

**"Round-Up சேமிப்புத் தெரிவு அல்லது "Round-Up"** என்பது FriMi வங்கிக் கணக்கைப் பயன்படுத்தி செயலாற்றப்படுகின்ற அனைத்து பற்றுக் கொடுக்கல் வாங்கல்களையும் கிட்டிய பெறுமதிக்கு சேகரித்து சேகரிக்கப்பட்ட தொகையைச் சேமிப்பதற்கு வாடிக்கையாளரை இயலச்செய்கின்ற FriMi செயலி மீது கிடைக்கப்டிபெறுகின்ற ஒரு தெரிவு என்பது பொருளாகும்.

**"Round-Up சேமிப்புக் கணக்கு"** என்பது FriMi செயலி மீது Round-Up சேமிப்புக் கணக்கை இயலச்செய்கின்ற நேரத்தில் வாடிக்கையாளர் சார்பில் வங்கி மூலம் ஆரம்பிக்கப்படுகின்ற நேஷன்ஸ் சேவர் சேமிப்பு கணக்கொன்றின் வகையின் கீழ் வருகின்ற வங்கியின் ஒரு சேமிப்பு கணக்கு உற்பத்தி என்பது பொருளாகும்.

**"Round-Up பெறுமதி"** என்பது Round-Up சேமிப்புத் தெரிவின் கீழ் தெரிவுசெய்ய்ப்பட்ட தொகை என்பது பொருளாகும்.

**"KYC"** என்பது உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் என்பது பொருளாகும்.